15476

AL/2016/21/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

ආර්ථික විද්‍යාව I
பொருளியல் I
Economics I

21 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

| பக்க இல. | வினா இல. | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | 01 - 03 | |
| 02 | 04 - 10 | |
| 03 | 11 - 14 | |
| 04 | 15 - 21 | |
| 05 | 22 - 29 | |
| 06 | 30 - 36 | |
| 07 | 37 - 43 | |
| 08 | 44 - 50 | |
| மொத்தம் | | |

சுட்டெண் : ................................

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| | கையொப்பம் | குறியீட்டு எண் |
|---|---|---|
| 1 வது பரீட்சகர் | | |
| 2 வது பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

**அறிவுறுத்தல்கள்:**

* **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது **சுட்டெண்ணைத்** தெளிவாக எழுதுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.**

**1.** பொருளியலில் 'அருமை' என்ற எண்ணக்கருவினால் குறிப்பிடப்படுவது,
(1) தம்மிடமுள்ள அனைத்து வளங்களையும் சமூகம் வினைத்திறனாகப் பயன்படுத்தாத ஒரு நிலையினையாகும்.
(2) கிடைக்கப்பெறும் வளங்களைக் கொண்டு மக்களின் விருப்பங்களை ஒருபோதும் பூர்த்திசெய்ய இயலாத நிலையினையாகும்.
(3) ஒவ்வொரு சமூகத்தினதும் சில அங்கத்தவர்கள் வறுமையில் வாடும் நிலையினையாகும்.
(4) சமூகரீதியில் விரும்பப்படும் பொருள்கள், சேவைகளை உற்பத்திசெய்வதற்குப் பதிலாக முக்கியத்துவம் அற்ற பொருள்கள், சேவைகளை தேவைக்கதிமாக உற்பத்தி செய்யும் நிலையினையாகும்.
(5) உற்பத்தி வினைத்திறனாகவுள்ள போதிலும் பங்கீடு வினைத்திறனற்ற நிலையினையாகும். (......)

**2.** ஆரம்பப் புள்ளியை நோக்கி குழிவாக வரையப்படும் உற்பத்தி இயல்தகவு வளையிகளால் வெளிப்படுத்தப்படுவது,
(1) ஏதேனுமொரு பொருளை அதிகளவில் உற்பத்தி செய்கையில் அதன் அமையச் செலவு குறைவடைதலாகும்.
(2) பொருளாதாரத்தில் வளங்களின் அருமைத்தன்மை நிலவுதலாகும்.
(3) ஏதேனுமொரு பொருளை அதிகளவில் உற்பத்தி செய்கையில் அதன் அமையச் செலவு நிலையாக உள்ளமையாகும்.
(4) பொருளாதாரத்தின் வளங்கள் நியாயமற்ற முறையில் பங்கீடு செய்யப்பட்டிருத்தலாகும்.
(5) ஏதேனுமொரு பொருளை அதிகளவில் உற்பத்தி செய்கையில் அதன் அமையச் செலவு அதிகரித்துச் செல்கின்றமையாகும். (......)

**3.** பின்வருவனவற்றுள் தாராள சந்தைப் பொருளாதாரம் தொடர்பில் **பிழையானது** எது ?
(1) விலை, பொருளாதாரத்திலுள்ள போட்டித்தன்மை கொண்ட துறைகள் மத்தியில் வளங்களைச் சமமாக ஒதுக்கீடு செய்கின்றது.
(2) விலை, பொருள்கள் சேவைகளின் சார்பளவு அருமைத்தன்மைகளையும் அவற்றின் உற்பத்திச் செலவுகளையும் வெளிப்படுத்துகின்றது.
(3) சார்பு விலை மாற்றங்கள் உற்பத்தி நிறுவனங்களின் இலாபங்களைத் தீர்மானிக்கும் ஒரு காரணியாகவுள்ளதுடன் அதன் காரணமாக அவை உற்பத்தியை ஊக்குவிப்பதில் அல்லது அதைரியப்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும்.
(4) விலை, பொருள்கள் சேவைகளின் பொருட்டு நுகர்வோர் செலுத்தத் தயாராகவுள்ள விருப்பத்தின் அளவீடாகும்.
(5) விலை, ஒரு பண்டத்தைப் பெற்றுக்கொள்ள நுகர்வோர் எவ்வளவு விட்டுக்கொடுக்க வேண்டும் என்பதற்கான சமிக்ஞையை வழங்குகிறது. (......)

[பக். 2 ஐப் பார்க்க

More Past Papers at tamilguru.lk

More Past Papers at tamilguru.lk

**4.** போட்டிச் சந்தையொன்றில் வெளிவாரிகளற்ற நிலையில் வள ஒதுக்கீட்டு வினைத்திறன் நிலவுவது, எல்லாச் சந்தைகளிலும் விலை
(1) மொத்தச் செலவுக்குச் சமப்படும் போதாகும்.
(2) எல்லை வருவாய்க்குச் சமப்படும் போதாகும்.
(3) எல்லைச் செலவுக்குச் சமப்படும் போதாகும்.
(4) சராசரி மாறுஞ்செலவுக்குச் சமப்படும் போதாகும்.
(5) எல்லை உற்பத்தியின் பெறுமதிக்குச் சமப்படும் போதாகும். (……)

**5.** 'மனித மூலதனம்' என்பதனால் குறிப்பிடப்படுவது,
(1) மூலதனக் கருவிகளை உற்பத்திசெய்யப் பயன்படும் ஊழிய வளமாகும்.
(2) கட்டடங்களும் பொறிகளுமாகும்.
(3) தொழிற்படையின் திறன்கள் மற்றும் அறிவுத் திரட்சியாகும்.
(4) முயற்சியாண்மையும் இடர்களை ஏற்கும் இயலுமையுமாகும்.
(5) சுகாதார மற்றும் கல்வித் துறைகளில் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்படையாகும். (……)

**6.** சாத்திய வெளியீடு என்பது,
(1) கடந்த பத்தாண்டுக் காலப்பகுதியில் பொருளாதாரமொன்று உண்மையில் பெற்றுக்கொண்ட உயர்ந்தபட்ச மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.
(2) முழுமையான தொழிற்படையும் வணிகப் பொருளுற்பத்தித் துறையில் தொழில்புரியும் காலப்பகுதிகளில் எய்தும் உற்பத்தியாகும்.
(3) பொருளாதாரமானது சகல வளங்களையும் வினைத்திறன் மிக்க விதத்தில் பயன்படுத்துவதன் மூலம் ஒருபோதும் எய்த முடியாத ஓர் இலக்காகும்.
(4) பொருளாதாரத்தின் வளங்களை தொழிலில் பூரணமாக, உத்தம மட்டத்தில் ஈடுபடுத்தும்போது உற்பத்தி செய்யத்தக்க மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.
(5) பொருளாதாரத்தின் வளங்களை தொழிலில் பூரணமாக, உச்ச மட்டத்தில் ஈடுபடுத்தும்போது உற்பத்தி செய்யத்தக்க மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும். (……)

**7.** X என்பது போட்டிச் சந்தையொன்றில் விற்பனை செய்யப்படும் ஓர் இழிவுப் பொருளாகும். X இற்கான சந்தையில் ஏனைய காரணிகள் மாறாத நிலையில் கொள்வனவாளரின் வருமானத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியின் காரணமாக X பொருளின் கேள்வி, சமநிலை விலை, சமநிலைத் தொகை என்பவற்றில் ஏற்படும் தாக்கம் யாது ?

| | கேள்வி | விலை | தொகை |
|---|---|---|---|
| (1) | குறைவடையும். | குறைவடையும். | குறைவடையும். |
| (2) | அதிகரிக்கும். | அதிகரிக்கும். | அதிகரிக்கும். |
| (3) | குறைவடையும். | அதிகரிக்கும். | குறைவடையும். |
| (4) | அதிகரிக்கும். | குறைவடையும். | குறைவடையும். |
| (5) | குறைவடையும். | அதிகரிக்கும். | அதிகரிக்கும். |

(……)

**8.** அத்தியாவசியப் பொருளொன்றின் மீது சிறப்பு வரி (அலகு வரி) விதிக்கப்படுவதுடன் அப்பொருளின் சந்தைக் கேள்வித் தொகையையும் வரிவிதிப்பின் முன்னரும் பின்னருமான சந்தை நிரம்பல் தொகையையும் பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| விலை (ரூ.) | கேள்வித் தொகை | வரி விதிப்பின் முன் நிரம்பல் தொகை | வரி விதிப்பின் பின் நிரம்பல் தொகை |
|---|---|---|---|
| 12 | 50 | 20 | 0 |
| 13 | 50 | 30 | 10 |
| 14 | 50 | 40 | 20 |
| 15 | 50 | 50 | 30 |
| 16 | 50 | 60 | 40 |

பொருளின் ஓர் அலகின் மீது விதிக்கப்பட்ட வரியின் அளவு யாது ?
(1) ரூபா 2 (2) ரூபா 3 (3) ரூபா 4 (4) ரூபா 5 (5) ரூபா 6 (……)

**9.** குமிழ்முனைப் பேனாவிற்கான விலைக் கேள்வி நெகிழ்ச்சி –3.0 ஆகும். பேனாவின் விலை ரூ. 25 ஆகும்போது கேள்வித் தொகை 300 பேனைகளாகும். விலையானது ரூ. 20 ஆக வீழ்ச்சியடையுமாயின், கேள்வித் தொகை யாது ?
(1) 900 (2) 630 (3) 560 (4) 480 (5) 180 (……)

**10.** யாதேனும் ஒரு பொருள் அல்லது சேவையின் சந்தை நிரம்பல் வளையியானது இடப்புறம் நோக்கி நகர்வது,
(1) தொழினுட்பம் முன்னேற்றமடையும் போதாகும்.
(2) உள்ளீடுகளின் விலைகள் வீழ்ச்சியடையும் போதாகும்.
(3) உள்ளீடுகளின் விலைகள் அதிகரிக்கும் போதாகும்.
(4) தொழினுட்ப முன்னேற்றம் ஏற்படும்போதும் உள்ளீடுகளின் விலை வீழ்ச்சியடையும் போதுமாகும்.
(5) தொழிலில் அதிக எண்ணிக்கையில் நிரம்பலாளர்கள் பிரவேசிக்கும் போதாகும். (……)

[பக். 3 ஐப் பார்க்க

More Past Papers at tamilguru.lk


**11.** X பொருளின் நிரம்பல் வளையியானது பின்வரும் சமன்பாட்டினால் காட்டப்பட்டுள்ளது.

$$Q_X = 6\,P_X$$

இங்கு $Q_X$ என்பது X பொருளின் நிரம்பல் தொகையாகும். $P_X$ என்பது X பொருளின் விலையாகும். X பொருளின் நிரம்பலின் விலை நெகிழ்ச்சி தொடர்பில் மேற்படி சமன்பாட்டிலிருந்து நாம் உய்த்தறிவது யாது ?

(1) நிரம்பலின் விலை நெகிழ்ச்சி 6.0 ஆகும். (2) நிரம்பலின் விலை நெகிழ்ச்சி 1.0 ஆகும்.
(3) நிரம்பலின் விலை நெகிழ்ச்சி 0.1 ஆகும். (4) நிரம்பலின் விலை நெகிழ்ச்சி 0.0 ஆகும்.
(5) நிரம்பலின் விலை நெகிழ்ச்சி 0.6 ஆகும். (......)

**12.** X பொருளின் மீது விதிக்கப்பட்டிருந்த சிறப்பு வரி நீக்கப்பட்ட பின் நிரம்பலானது $S_2$ இலிருந்து $S_1$ ஆக அதிகரிப்பதை பின்வரும் வரைபடம் காட்டுகிறது. $S_1$ என்பது வரிக்கு முன்னரான நிரம்பல் வளையியாகவும் வரி நீக்கப்பட்ட பின்னரான நிரம்பல் வளையியாகவும் காணப்படுகிறது.




வரி நீக்கப்பட்டதன் காரணமாக வரி வருவாய் மற்றும் நுகர்வோர் செலவீடு என்பவற்றின் மீது எவ்வாறான தாக்க விளைவு ஏற்படும் ?


| | வரி வருவாய் | நுகர்வோன் செலவீடு |
|---|---|---|
| (1) | 1 440 ஆல் வீழ்ச்சியடையும். | 2 000 ஆல் அதிகரிக்கும். |
| (2) | 480 ஆல் வீழ்ச்சியடையும். | 560 ஆல் வீழ்ச்சியடையும். |
| (3) | 480 ஆல் வீழ்ச்சியடையும். | 560 ஆல் அதிகரிக்கும். |
| (4) | 960 ஆல் அதிகரிக்கும். | 1 440 ஆல் அதிகரிக்கும். |
| (5) | 1 440 ஆல் வீழ்ச்சியடையும். | 960 ஆல் வீழ்ச்சியடையும். |

(......)

**13.** பதிலீட்டு விளைவு என்பது, பின்வருவனவற்றில் ஒன்றின் காரணமாக கேள்வித் தொகையில் ஏற்படும் மாற்றமாகும். அக்காரணியாவது,

(1) ஏனையன மாறாநிலையில் சார்பு விலையில் ஏற்படும் ஒரு மாற்றமாகும்.
(2) மெய் வருமானம் மாறாநிலையில் முழு விலைகளில் ஏற்படும் ஒரு மாற்றமாகும்.
(3) பண வருமானம் மாறாநிலையில் சார்பு விலைகளில் ஏற்படும் ஒரு மாற்றமாகும்.
(4) சார்பு விலைகள் மாறாநிலையில் மெய் வருமானத்தில் ஏற்படும் ஒரு மாற்றமாகும்.
(5) சார்பு விலை மாறாநிலையில் பண வருமானத்தில் ஏற்படும் ஒரு மாற்றமாகும். (......)

**14.** இவ் வரைபடம் ஒரு நாடு இறக்குமதி செய்யும் நுகர்வுப் பொருளின் கேள்வி வளையியைக் காட்டுகிறது. இந் நாட்டின் அரசாங்கம் இப் பொருளின் மீது அலகொன்றுக்கு $P_1 - P_2$ அளவான இறக்குமதி வரியினை விதிக்கிறது. அதன் விளைவாக நுகர்வோன் மிகையில் ஏற்படும் இழப்பின் அளவும் அரசாங்க வருவாய் அதிகரிப்பும் வரைபடத்தின் எப்பிரதேசங்களினால் அளவிடப்படுகின்றன ?





| | நுகர்வோன் மிகை இழப்பு | அரசாங்க வருவாய் அதிகரிப்பு |
|---|---|---|
| (1) | A + B | B + C |
| (2) | A + B + C | B |
| (3) | A + B | B + C + D + E |
| (4) | D | B + D |
| (5) | B + C | B |

(......)

[பக். 4 ஐப் பார்க்க

**15.** பின்வரும் வரைபடம் பொருளொன்றின் சந்தைக் கேள்வி வளையியைக் காட்டுகிறது.




More Past Papers at
tamilguru.lk

இப்பொருளின் நிரம்பல் பூரண நெகிழ்ச்சியுள்ளதாகவும் ஆரம்பத்தில் பொருளின் விலை $P_1$ ஆகவும் இருப்பதாகக் கருதுக. இப்பொருளின் மீதான வரி விதிப்பு காரணமாக விலையானது $P_1$ இலிருந்து $P_2$ வரை அதிகரிக்கிறதாயின், வரியின் மிகைச் சுமை யாது ?

(1) $P_3 A P_4$ பகுதியாகும். (2) A D B பகுதியாகும். (3) $P_1 P_4$ C பகுதியாகும்.
(4) $P_1$ C B $P_2$ பகுதியாகும். (5) B F C பகுதியாகும். (……)

**16.** ஒரு நிறுவனம் தனது சகல உள்ளீடுகளையும் 50% இனால் அதிகரிக்கும்போது அதன் வெளியீடு 40% இனால் அதிகரிக்கிறது. இதன் மூலம் வெளிப்படுத்தப்படுவது,

(1) குறைந்து செல்லும் விளைவு விதியாகும். (2) குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதியாகும்.
(3) மாறும் விகிதசம விதியாகும். (4) அதிகரித்துச் செல்லும் அளவுத்திட்ட விளைவு விதியாகும்.
(5) எல்லை விளைவு விதியாகும். (……)

**17.** அதி தாழ்ந்த சராசரி மாறும் செலவுக்குக் கீழுள்ள விலை வீச்சுகளில் நிறைபோட்டி உற்பத்தி நிறுவனமொன்றின் நிரம்பல் வளையியானது,

(1) நிலவும் சந்தை விலையில் கிடையச்சுக்குச் சமாந்தரமாகும்.
(2) பூச்சிய வெளியீட்டில் நிலைக்குத்தாகக் காணப்படும்.
(3) நிறுவனத்தின் எல்லைச் செலவு வளையிக்குச் சமமாகும்.
(4) நிறுவனத்தின் சராசரி மாறுஞ் செலவு வளையிக்குச் சமமாகும்.
(5) நேர்க்கணிய வெளியீட்டைக் கொண்டதாக மேல் நோக்கிச் சரிந்து செல்லும். (……)

**18.** போட்டிச் சந்தையொன்றில் இயங்கும் நிறுவனமொன்று இலாபத்தை உச்சப்படுத்தும் வெளியீட்டு மட்டம் நிர்ணயிக்கப்படும் புள்ளியில்,

(1) எல்லைச் செலவு குறைவடைந்து செல்லும்.
(2) எல்லைச் செலவு அதிகரித்துச் செல்லும்.
(3) எல்லை வருவாய் அதிகரித்துச் செல்லும்.
(4) எல்லைச் செலவு அதன் அதி தாழ்ந்த மட்டத்தில் காணப்படும்.
(5) எல்லைச் செலவு எல்லை வருவாயை விடக் குறைவாகக் காணப்படும். (……)

**19.** குறுங்காலத்தில் நிறுவனமொன்று எதுவித உற்பத்தியையும் மேற்கொள்ளவில்லையாயின் பின்வருவனவற்றில் எந்தச் செலவு பூச்சியமாகும் ?

(1) அமையச் செலவு (2) மொத்த மாறுஞ்செலவு
(3) மொத்த நிலையான செலவு (4) சராசரி மொத்தச் செலவு
(5) மொத்தச் செலவு (……)

**20.** வருமானச் சுற்றோட்ட மாதிரியில் காணப்படும் 'மெய்'ப் பாய்ச்சல்களுள் ஒன்று,

(1) நிறுவனத்துறையிலிருந்து வீட்டுத்துறையை நோக்கிச் செல்லும் பொருள்கள், சேவைகளின் பாய்ச்சல்
(2) நிறுவனத்துறையிலிருந்து வீட்டுத்துறையை நோக்கிச் செல்லும் காரணிச் சேவைகளின் பாய்ச்சல்
(3) வீட்டுத்துறையிலிருந்து நிறுவனத்துறையை நோக்கிச் செல்லும் பொருள்கள், சேவைகளின் பாய்ச்சல்
(4) நிறுவனத்துறையிலிருந்து வீட்டுத்துறையை நோக்கிச் செல்லும் பணப் பாய்ச்சல்கள்
(5) வீட்டுத்துறையிலிருந்து நிறுவனத்துறையை நோக்கிச் செல்லும் பணப் பாய்ச்சல்கள் (……)

**21.** தரப்பட்ட ஒரு நாட்டில் கடந்த வருடத்தில் பொது விலை மட்டமானது அதிகரித்தபோதிலும் பொருள்கள், சேவைகளின் உற்பத்தி நிலையாகக் காணப்பட்டதாகக் கருதுக. இத் தகவல்களின் அடிப்படையில் பின்வருவனவற்றுள் சரியானது எது ?

| | பெயரளவு மொ. உ. உ. | மெய் மொ. உ. உ. |
|---|---|---|
| (1) | அதிகரித்தது. | அதிகரித்தது. |
| (2) | மாறவில்லை. | மாறவில்லை. |
| (3) | வீழ்ச்சியடைந்தது. | வீழ்ச்சியடைந்தது. |
| (4) | அதிகரித்தது. | மாறவில்லை. |
| (5) | வீழ்ச்சியடைந்தது. | அதிகரித்தது. |

(……)

[பக். 5 ஐப் பார்க்க


**22.** தனியார் வருமானக் கணிப்பீட்டில் உள்ளடக்கப்படும் அதேவேளை தேசிய வருமானத்தில் **உள்ளடக்கப்படாதது** பின்வருவனவற்றுள் எது ?
(1) கம்பனிப் பங்குலாபங்கள் (2) மாற்றல் செலுத்தல்கள்
(3) சமூகப் பாதுகாப்புப் பங்களிப்புகள் (4) பகிரப்படாத கம்பனி இலாபங்கள்
(5) தேறிய வட்டி (......)

**23.** எளிமையான பொருளாதாரமொன்றின் மொத்த நுகர்வுச்சார்பு $C = 250 + 0.75Y$ ஆகவும் முதலீடு $I = 450$ ஆகவும் உள்ளன. இப்பொருளாதாரத்தின் சமநிலை வருமான மட்டம்
(1) 1 800 ஆகும். (2) 2 800 ஆகும். (3) 3 600 ஆகும். (4) 7 200 ஆகும். (5) 9 000 ஆகும். (......)

**24.** பின்வருவனவற்றுள் எதில் ஏற்படும் அதிகரிப்பு முதலீட்டுப் பெருக்கியின் பெறுமதியை அதிகரிக்கும் ?
(1) பண நிரம்பல் (2) சமநிலை வெளியீடு
(3) தனியார் வருமானவரி வீதங்கள் (4) எல்லை நுகர்வு நாட்டம்
(5) நியதி ஒதுக்கு வீதம் (......)

**25.** பின்வருவனவற்றுள் எது, பொருளாதாரமொன்றின் வருமானச் சுற்றோட்டத்தில் ஓர் உட்பாய்ச்சலாகக் (injection) கருதப்படும் ?
(1) வர்த்தகமீதியில் ஒரு குறைநிலை
(2) அரசாங்கப் பாதீட்டுக் குறைநிலை
(3) தேறிய வரிகளில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(4) தனியார் கம்பனிகளின் பகிரப்படாத இலாபங்கள்
(5) வீட்டுத்துறை சேமிப்புகள் (......)

**26.** பின்வரும் வரைபடமானது பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளியல் மாறிகளின் நடத்தையினைக் காட்டுகிறது.




More Past Papers at tamilguru.lk

இப்பொருளாதாரத்தின் தேசிய வருமான மட்டம் $Y_3$ ஆகவும் மொத்த செலவீட்டுத் தொழிற்பாடு $AE_1$ ஆகவும் இருப்பின்,
(1) பொருளாதாரம் சமநிலையில் இருக்கும்.
(2) எதிர்பாராத கையிருப்புத் திரட்சி ஏற்படுவதுடன் தேசிய வருமானம் அதிகரிக்கும்.
(3) எதிர்பாராத கையிருப்புத் திரட்சி ஏற்படுவதுடன் தேசிய வருமானம் குறைவடையும்.
(4) எதிர்பாராத கையிருப்பு வீழ்ச்சியடைவதுடன் தேசிய வருமானம் அதிகரிக்கும்.
(5) எதிர்பாராத கையிருப்பு வீழ்ச்சியடைவதுடன் தேசிய வருமானம் குறைவடையும். (......)

**27.** நாணயக் கணியக் கோட்பாட்டின்படி பெயரளவுப் பணநிரம்பலில் ஏற்படும் 10% அதிகரிப்பு
(1) மெய்ப் பணநிரம்பலை 10% அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும்.
(2) மெய் வெளியீட்டை 10% அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும்.
(3) வட்டி வீதத்தை 10% வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும்.
(4) பொதுவிலை மட்டத்தை 10% அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும்.
(5) பணப்புழக்கச் சுற்றோட்டத்தில் அதற்கு ஈடான வீழ்ச்சியினை ஏற்படுத்தும். (......)

**28.** ஒரு நாட்டின் தேசிய வருமானமானது பூரண வேலைவாய்ப்பு மட்டத்தில் உள்ளதாகக் கொண்டால் பின்வரும் நிலைமைகளில் எது பெரும்பாலும் பணவீக்கத்தை ஏற்படுத்தக்கூடும் ?
(1) வட்டி வீதத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(2) ஊழிய விளைதிறனில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(3) நாணயமாற்று வீதத்தின் பெறுமதி அதிகரிப்பு
(4) எல்லை இறக்குமதி நாட்டத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(5) தனியார் வருமான வரி வீதத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு (......)

**29.** வணிக வங்கிகள் பணத்தை உருவாக்க முடிவது,
(1) ஒதுக்குகளைப் பிணையங்களாக மாற்றியமைப்பதனூடாகவாகும்.
(2) மத்திய வங்கியிடமிருந்து திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்வதன் மூலமாகும்.
(3) கையிருப்பிலுள்ள பணத்தை மத்திய வங்கிக்கு அனுப்புவதன் மூலமாகும்.
(4) 100% ஒதுக்குத் தேவையினைப் பேணுவதன் மூலமாகும்.
(5) மிகை ஒதுக்குகளை வாடிக்கையாளருக்குக் கடனாக வழங்குவதன் மூலமாகும். (......)

[பக். 6 ஐப் பார்க்க

More Past Papers at tamilguru.lk

**30.** நபரொருவர் தனது வணிக வங்கி வைப்புக் கணக்கிலிருந்து ரூ. 10 000 ஐ மீளப் பெறுவாராயின், ஏனையன மாறாத நிலையில், வங்கியின் நியதி ஒதுக்குத் தேவை 20% ஆக இருப்பின், இக்கொடுக்கல்வாங்கல் காரணமாக நேரடியாக,
(1) பணநிரம்பல் ரூ. 10 000 இனால் குறைவடையும்.
(2) வங்கி வைப்புகள் ரூ. 10 000 இனால் குறைவடையும்.
(3) பணநிரம்பல் ரூ. 50 000 இனால் குறைவடையும்.
(4) வங்கி வைப்புகள் ரூ. 50 000 இனால் குறைவடையும்.
(5) வங்கி வைப்புகள் ரூ. 8 000 இனால் குறைவடையும். (......)

**31.** இலங்கையின் வணிக வங்கிகள் தமது நியதி ஒதுக்குகளைப் பேணுவது,
(1) கையிருப்பில் உள்ள பணம் மற்றும் மத்திய வங்கியிலுள்ள வைப்புகள் ஆகிய வடிவங்களிலாகும்.
(2) கையிருப்பில் உள்ள பணம் மற்றும் திறைசேரி உண்டியல்கள் என்னும் வடிவங்களிலாகும்.
(3) வங்கிப் பெட்டகத்திலுள்ள தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்களின் வடிவிலாகும்.
(4) ஏனைய வணிக வங்கிகளில் வைப்புச் செய்துள்ள, உடனடியாக மீளப் பெறக்கூடிய வைப்புகளின் வடிவிலாகும்.
(5) மத்திய வங்கியில் வைப்புச் செய்துள்ள வைப்புகள் மற்றும் வெளிநாட்டு நாணயங்களின் வடிவிலாகும். (......)

**32.** மத்திய வங்கியானது வணிக வங்கிகளிடமிருந்து திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யுமாயின், வங்கி ஒதுக்குகளுக்கும் பணநிரம்பலுக்கும் யாது நிகழும் ?

| | வங்கி ஒதுக்குகள் | பணநிரம்பல் |
|---|---|---|
| (1) | அதிகரிக்கும். | குறையும். |
| (2) | அதிகரிக்கும். | அதிகரிக்கும். |
| (3) | குறையும். | குறையும். |
| (4) | குறையும். | அதிகரிக்கும். |
| (5) | அதிகரிக்கும். | மாறாது. |

More Past Papers at
tamilguru.lk

(......)

**33.** நுகர்வில் போட்டித்தன்மை அற்றதும் விலக்கி வைக்க முடியாத தன்மை கொண்டதுமான பொருள்
(1) தூய தனியார் பொருளாக இருக்க முடியாது.
(2) தூய பொதுப் பொருளாக இருக்க முடியாது.
(3) இழிவுப் பொருளாக இருக்க முடியாது.
(4) அரைகுறை பொதுப் பொருளாக இருக்க முடியாது.
(5) உலகப் பொதுப் பொருளாக இருக்க முடியாது. (......)

**34.** ஒடுங்கு முறை வரி நடைமுறையிலுள்ளபோது வறியவர்கள்,
(1) செல்வந்தர்களை விட தமது வருமானத்தின் குறைந்த சதவீதங்களை வரியாகச் செலுத்துவர்.
(2) செல்வந்தர்களை விட ரூபாய் வடிவில் பெரியளவு தொகையினை வரியாகச் செலுத்துவர்.
(3) தமது வருமான மட்டத்திற்கேற்ப சதவீத அடிப்படையில் மாற்றமுறும் வரியினைச் செலுத்துவர்.
(4) செல்வந்தர்களை விட ரூபாய் அடிப்படையில் குறைந்த தொகையினை வரியாகச் செலுத்துவர்.
(5) செல்வந்தர்களை விட தமது வருமானத்தின் உயர்வான சதவீதத்தை வரியாகச் செலுத்துவர். (......)

**35.** தூய பொதுப் பொருளொன்றை நுகர மேலுமொரு நபரை அனுமதிப்பதன் எல்லைச் சமூகச் செலவானது,
(1) எதிர்க் கணியமாகும். (2) பூச்சியமாகும். (3) நேர்க் கணியமாகும்.
(4) முடிவிலியாகும். (5) நுகர்வோரின் எண்ணிக்கைக்கேற்ப அதிகரிக்கும். (......)

**36.** பின்வரும் அட்டவணையானது தாராள சந்தையொன்றில் உற்பத்தி செய்யப்படும் பொருளொன்றின் சமநிலை வெளியீட்டின்போது அப்பொருளின் எல்லைத் தனியார் மற்றும் எல்லை வெளிவாரி நன்மைகளையும், எல்லைத் தனியார் மற்றும் எல்லை வெளிவாரிச் செலவுகளையும் காட்டுகிறது.

| வகை | ரூபா மில்லியன் | வகை | ரூபா மில்லியன் |
|---|---|---|---|
| எல்லைத் தனியார் நன்மை | 36 | எல்லைத் தனியார் செலவு | 24 |
| எல்லை வெளிவாரி நன்மை | 18 | எல்லை வெளிவாரிச் செலவு | 0 |

இச்சந்தையில் அரசாங்கத் தலையீடானது வளங்களின் வினைத்திறனான ஒதுக்கீட்டை மேம்படுத்தும். ஏனெனில் இப்பொருள்
(1) பொதுப் பொருளாக இருப்பதனாலாகும்.
(2) மேன்மைப் பொருளாக இருப்பதனாலாகும்.
(3) தீங்கிழைக்கும் பொருளாக இருப்பதனாலாகும்.
(4) உலகப் பொதுப் பொருளாக இருப்பதனாலாகும்.
(5) இழிவுப் பொருளாக இருப்பதனாலாகும். (......)

[பக். 7 ஐப் பார்க்க

**37.** பாதீட்டுக் குறைநிலையை நிதியீட்டம் செய்யும் பின்வரும் முறைகளில் எது மொத்தக் கேள்வியை மிகப் பெரிய அளவில் அதிகரிக்கச் செய்யும் ?
(1) முறிகளை வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்தல்
(2) முறிகளை மத்திய வங்கிக்கு விற்பனை செய்தல்
(3) முறிகளை வணிக வங்கிகளுக்கு விற்பனை செய்தல்
(4) முறிகளை தேசிய சேமிப்பு வங்கிக்கு விற்பனை செய்தல்
(5) முறிகளை ஊழியர் சேமலாப நிதிக்கு விற்பனை செய்தல் (......)

More Past Papers at
tamilguru.lk

**38.** பின்வரும் அட்டவணையைக் கருத்திற் கொள்க.

| ஆண்டு | ஏற்றுமதி விலைச் சுட்டெண் | வர்த்தக மாற்றுவீதச் சுட்டெண் |
|---|---|---|
| 1 | 100 | 100 |
| 2 | 90 | 80 |
| 3 | 80 | 60 |

இத்தரவுகளிலிருந்து நாம் எய்தக்கூடிய ஒரு சாத்தியமான முடிவு யாதெனில், மேற்படி காலப்பகுதியில்
(1) ஏற்றுமதி விலைகள் அதிகரித்துள்ளன என்பதாகும்.
(2) இறக்குமதி விலைகள் அதிகரித்துள்ளன என்பதாகும்.
(3) வர்த்தமாற்று விகிதத்தில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதாகும்.
(4) சமமானளவு ஏற்றுமதிகளைக் கொண்டு அதிகளவு இறக்குமதிகளைக் கொள்வனவு செய்யலாம் என்பதாகும்.
(5) ஏற்றுமதிகளின் விலையதிகரிப்பு இறக்குமதிகளின் விலையதிகரிப்பை விட உயர்வானது என்பதாகும். (......)

**39.** நாடொன்று எந்தவொரு பொருள் அல்லது சேவை உற்பத்தியிலும் முழு நன்மையைக் கொண்டிருக்காதாயின், பின்வருவனவற்றுள் எது சரியாகும் ?
(1) அந்நாடு ஒப்பீட்டு நன்மையையும் கொண்டிருக்காது.
(2) அந்நாடு தான் குறைந்த அமையச் செலவில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள் அல்லது சேவை உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டிருக்கும்.
(3) அந்நாடு மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்வதுடன் முடிவுப் பொருள்களை இறக்குமதி செய்யும்.
(4) செலவில் நன்மை இல்லாத காரணத்தினால் இந்நாட்டுடன் எந்தவொரு நாடும் வர்த்தகம் செய்ய விரும்பாது.
(5) அந்நாட்டு நாணயத்தின் சர்வதேச பெறுமதி நிலையாகக் காணப்படும். (......)

**40.** வெளிநாட்டு நாணயச் சந்தையில் இலங்கை ரூபாவிற்கான கேள்வி எழுவது,
(1) இலங்கையின் ஏற்றுமதிகள் + இலங்கையிலிருந்தான மூலதன வெளிப்பாய்ச்சல்கள் மூலமாகும்.
(2) இலங்கையின் ஏற்றுமதிகள் + இலங்கைக்கான மூலதன உட்பாய்ச்சல்கள் மூலமாகும்.
(3) இலங்கையின் இறக்குமதிகள் + இலங்கையிலிருந்தான மூலதன வெளிப்பாய்ச்சல்கள் மூலமாகும்.
(4) இலங்கையின் இறக்குமதிகள் + இலங்கைக்கான மூலதன உட்பாய்ச்சல்கள் மூலமாகும்.
(5) இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டு ஒதுக்குகளின் கையிருப்புகள் மூலமாகும். (......)

**41.** ஒப்பீட்டு நன்மை பற்றிய பின்வரும் கூற்றுகளில் சரியானது எது ?
(1) ஒப்பீட்டு நன்மையானது முழுமையாக காலநிலை வேறுபாடுகளில் தங்கியுள்ளது.
(2) ஒப்பீட்டு நன்மையானது முழுமையாக காரணித் திரட்சியில் நிலவும் வேறுபாடுகளில் தங்கியுள்ளது.
(3) ஒப்பீட்டு நன்மையைக் கொண்டிருப்பதற்கு ஒரு நாடு முழு நன்மையையும் கொண்டிருக்க வேண்டும்.
(4) அதிகரித்துச் செல்லும் விலை மட்டத்தைக் கொண்டுள்ள ஒரு நாடு ஏற்கனவே தான் கொண்டுள்ள ஒப்பீட்டு நன்மையினை இழக்கும்.
(5) பொருத்தமான அரசாங்கக் கொள்கைகளின் மூலம் சில பொருட்களுக்கான ஒப்பீட்டு நன்மையானது உருவாக்கப்படலாம். (......)

**42.** ஏனையன மாறா நிலையில் உள்நாட்டு நாணயத்தின் வெளியகப் பெறுமதி உயர்வானது,
(1) இறக்குமதிப் பொருள்களின் உள்நாட்டு விலையினைக் குறைக்கும்.
(2) இறக்குமதிப் பொருள்களின் உள்நாட்டு விலையினை அதிகரிக்கும்.
(3) இறக்குமதிப் பொருள்களின் வெளிநாட்டு விலையினை அதிகரிக்கும்.
(4) இறக்குமதிப் பொருள்களின் வெளிநாட்டு விலையினைக் குறைக்கும்.
(5) வெளிநாடொன்றில் உள்நாட்டு நாணயத்தின் பெறுமதியினைக் குறைக்கும். (......)

**43.** இலங்கை கம்பனியொன்று மத்திய கிழக்கில் அமைந்துள்ள தனது ஆடைத் தொழிற்சாலையிலிருந்து ரூ. 40 மில்லியன் பங்கிலாபத்தைப் பெற்றுக்கொள்வதாகக் கருதுக. இப்பங்கிலாபமானது இரட்டைப்பதிவு முறைமையின் அடிப்படையில் இலங்கையின் சென்மதி நிலுவை அட்டவணையில் எவ்வாறு பதியப்படும் ?
(1) மூலதனக் கணக்கில் வரவு மற்றும் நிதிக் கணக்கில் செலவு
(2) மூலதனக் கணக்கில் செலவு மற்றும் நடைமுறைக் கணக்கில் செலவு
(3) மூலதனக் கணக்கில் வரவு மற்றும் நடைமுறைக் கணக்கில் செலவு
(4) நடைமுறைக் கணக்கில் வரவு மற்றும் நிதிக் கணக்கில் செலவு
(5) நடைமுறைக் கணக்கில் செலவு மற்றும் நிதிக் கணக்கில் வரவு (......)

[பக். 8 ஐப் பார்க்க

More Past Papers at tamilguru.lk

44. சில தொழிற்சாலைகள் தன்னியக்கமயப்படுத்தப்படும்போது (automation) பாரம்பரிய வேலையாட்கள் சிலர் தமது திறன்கள் பொருந்தாத நிலைமைக்கு முகங்கொடுப்பதுடன் அவர்களில் சிலர் வேலை இழக்கின்றனர். மறுபுறம் கணினி இயக்குபவர்களுக்கு உயர் கேள்வி நிலவுகிறது. இத்தகைய வேலையின்மையானது,

(1) சகடோட்ட வேலையின்மை என வகைப்படுத்தப்படும்.
(2) உராய்வு வேலையின்மை என வகைப்படுத்தப்படும்.
(3) இயற்கை வேலையின்மை என வகைப்படுத்தப்படும்.
(4) கட்டமைப்பு வேலையின்மை என வகைப்படுத்தப்படும்.
(5) மறைமுக வேலையின்மை என வகைப்படுத்தப்படும். (......)

More Past Papers at
tamilguru.lk

45. ஒரு நாடு அபிவிருத்தியடைந்துள்ளது என்பதை சிறப்பாக வெளிப்படுத்தும் மாற்றம் எது ?
(1) அந்நாட்டின் மெய் உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(2) மொத்த உலக ஏற்றுமதிகளில் அந்நாட்டின் சதவீதப் பங்களிப்பு அதிகரிப்பு
(3) அந்நாட்டின் சென்மதி நிலுவையில் ஏற்படும் ஒரு முன்னேற்றம்
(4) அந்நாட்டு நாணய அலகின் பெறுமதி அதிகரிப்பு
(5) அந்நாட்டின் சராசரி பிரஜையொருவரின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் ஒரு முன்னேற்றம் (......)

46. மொத்த தங்கியிருத்தல் விகிதம் என்பது,
(1) வயதுவந்தோர் சனத்தொகைக்கும் சிறுவர் சனத்தொகைக்கும் இடையிலான விகிதமாகும்.
(2) ஊழியப் படையில் தொழில்புரிவோருக்கும் தொழிலற்றோருக்கும் இடையிலான விகிதமாகும்.
(3) தொழில்புரியும் சனத்தொகையில் 100 பேருக்கு 65 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையின் விகிதமாகும்.
(4) 15 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகைக்கும் 15 வயதுக்கு உட்பட்ட சனத்தொகைக்கும் இடையிலான விகிதமாகும்.
(5) 15 - 59 வயது சனத்தொகைக்கும் 15 வயதுக்கு குறைந்த மற்றும் 59 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகைக்கும் இடையிலான விகிதமாகும். (......)

47. பின்வருவனவற்றுள் 2012/13 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுத் தரவுகளின்படி இலங்கையின் தலைக்குரிய வறுமைக் குறிக்காட்டியை சரியாகக் காட்டும் தரவுத் தொகுதி எது ?

| | நகரத் துறை % | கிராமியத் துறை % | தோட்டத் துறை % |
|---|---|---|---|
| (1) | 4.5 | 10.2 | 16.3 |
| (2) | 2.5 | 6.7 | 12.9 |
| (3) | 4.2 | 7.5 | 10.6 |
| (4) | 2.1 | 7.6 | 10.9 |
| (5) | 3.1 | 7.9 | 10.2 |

(......)

48. பின்வரும் பொருளியல் பிரச்சினைகளில் எதனை மதிப்பீடு செய்வதற்கு லோரன்ஸ் வளையியைப் பயன்படுத்த முடியும் ?
(1) பொருளாதாரத்தின் உற்பத்தி மற்றும் வளங்களின் ஒதுக்கீட்டு வினைத்திறன்
(2) வர்த்தகப் பங்காளிகளின் ஒப்பீட்டு நன்மைகள்
(3) நாடுகளிடையே சிறக்குமியல்பின் தீவிரத்தன்மை
(4) வருமானப் பங்கீட்டின் ஒப்புரவுத்தன்மை
(5) வேலையின்மைக்கும் விலையுறுதி நிலைக்கும் இடையிலான தொடர்பு (......)

49. பின்வருவனவற்றுள் 2014ஆம் ஆண்டின் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பில் விவசாயத்துறையின் பங்களிப்பை சரியாகக் காட்டுவது எது ?

| | GDP % | வேலைவாய்ப்பு % |
|---|---|---|
| (1) | 16.0 | 28.5 |
| (2) | 22.8 | 32.3 |
| (3) | 12.8 | 45.0 |
| (4) | 10.5 | 26.5 |
| (5) | 10.1 | 28.5 |

(......)

50. பின்வரும் நாடுகளுள் G7 குழுவின் அங்கத்துவ நாடு **அல்லாதது** எது ?
(1) ஜப்பான் (2) கனடா (3) பிரான்ஸ்
(4) இத்தாலி (5) ரஷ்யா (......)

* * *

15491



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

ආර්ථික විද්‍යාව II
பொருளியல் II
Economics II

21 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள் :**

* உப பிரிவு 'அ', உப பிரிவு 'ஆ' ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
* வரைபுத் தாள்கள் வழங்கப்படும்.

tamilguru.lk

## உப பிரிவு 'அ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

**1.** (i) பொருளாதார வளங்களின் **நான்கு** வகைகளும் எவை ? ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக. (04 புள்ளிகள்)

(ii) தாராள சந்தைப் பொருளாதாரமானது மத்திய திட்டமிடல் பொருளாதாரமொன்றிலிருந்து எவ்வழிகளில் வேறுபடுகின்றது ? (04 புள்ளிகள்)

(iii) பொருளியலில் பணமானது ஒரு மூலதன வளமாகக் **கருதப்படாதது** ஏன் ? (04 புள்ளிகள்)

(iv) முயற்சியாளன் என்பவர் யார் ? சந்தைப் பொருளாதாரமொன்றில் முயற்சியாளர்கள் ஏன் முக்கிய பங்கினை வகிக்கின்றனர் ? (04 புள்ளிகள்)

(v) சந்தைப் பொருளாதாரமொன்றின் வெற்றிக்கு தனியார் உரிமையும் சொத்துரிமைப் பாதுகாப்பும் ஏன் இன்றியமையாதனவாக உள்ளன ? (04 புள்ளிகள்)

**2.** (i) உற்பத்தி இயல்தகவு எல்லை என்றால் என்ன ? உற்பத்தி இயல்தகவு எல்லை ஒன்றை வரைவதில் நீர் கையாளும் எடுகோள்களைப் பட்டியலிடுக. (04 புள்ளிகள்)

(ii) உற்பத்தி இயல்தகவு எல்லையின் வெளிப்புற நகர்வை ஏற்படுத்தும் காரணிகள் யாவை ? (02 புள்ளிகள்)

(iii) அதிகரித்துச் செல்லும் எல்லை அமையச் செலவு என்பதனாற் கருதப்படுவதென்ன ? உற்பத்தி இயல்தகவு எல்லையின் வடிவம் தொடர்பில் இவ்வெண்ணக்கருவின் மூலம் வெளிப்படுத்தப்படுவதென்ன ? (04 புள்ளிகள்)

(iv) நெல் மற்றும் புடைவை உற்பத்தியில் ஈடுபடும், கூடிச்செல்லும் எல்லை அமையச் செலவை எதிர்நோக்கும் நாடொன்றின் உற்பத்தி இயல்தகவு எல்லையை வரைக. பின்வரும் நிகழ்வுகள் காரணமாக உற்பத்தி இயல்தகவு எல்லை எவ்வாறு மாற்றமடையுமெனக் காட்டுக.

(அ) முன்னேற்றகரமான புதிய வளமாக்கியொன்று கண்டுபிடிக்கப்படல்

(ஆ) இரு உற்பத்தித் துறைகளிலும் ஈடுபடுத்தத்தக்க ஊழியங்களின் எண்ணிக்கையில் பாரியளவிலான அதிகரிப்பு ஏற்படல்

(இ) அதிக வரட்சி நிலை காரணமாக பயன்பாட்டிலுள்ள பண்ணை நிலங்களின் அளவு 10% இனால் குறைவடைதல்

(ஈ) உற்பத்திச் செலவைக் குறைக்கும் வகையில் புடைவை உற்பத்தித் துறையில் புதிய தொழினுட்பம் கண்டுபிடிக்கப்படல் (06 புள்ளிகள்)

(v) உற்பத்தி வினைத்திறன் மற்றும் வள ஒதுக்கீட்டு வினைத்திறன் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை எடுத்துக்காட்டுக. (04 புள்ளிகள்)

**3.** (i) நுகர்வுப் பொருளொன்றின் விலைக் கேள்வி நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை ? (04 புள்ளிகள்)

(ii) கீழ்நோக்கிச் சரிந்து செல்லும் நேர்கோட்டுக் கேள்வி வளையியொன்றின் உயர்ந்தபட்ச விலை நிலவும் வீச்சில் கேள்வியானது விலை நெகிழ்வுள்ளதாயும் குறைந்தபட்ச விலை நிலவும் வீச்சில் விலை நெகிழ்வற்றதாயும் இருப்பது ஏன் ? (04 புள்ளிகள்)


(iii) பின்வரும் பொருள்களின் வருமானக் கேள்வி நெகிழ்ச்சிப் பெறுமதிகளின் அடிப்படையில் அவற்றை நீர் எவ்வாறு ஆடம்பரப் பொருள், அத்தியாவசியப் பொருள், இழிவுப் பொருள் என வகைப்படுத்துவீர் ?

| | | |
|---|---|---|
| (அ) | போத்தலில் அடைக்கப்பட்ட நீர் | 1.3 |
| (ஆ) | கௌபி | – 0.8 |
| (இ) | பாண் | 0.5 |
| (ஈ) | செல்லிடத் தொலைபேசி | 1.8 |

(04 புள்ளிகள்)


[பக். 2 ஐப் பார்க்க

(iv) பின்வரும் வரைபடம் போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படும் பொருளொன்றின் கேள்வி, நிரம்பல் வளையிகளைக் காட்டுகிறது.
அரசாங்கம் இச்சந்தையின் உற்பத்தியாளர் மீது அப்பொருளின் அலகொன்றுக்கு ரூ. 60 வரி விதிப்பதாகக் கொள்க.




(அ) வரியின் காரணமாக நுகர்வோன் மிகையானது எந்தளவினால் மாற்றமடையும் ? (02 புள்ளிகள்)
(ஆ) வரியின் காரணமாக உற்பத்தியாளர் மிகையானது எந்தளவினால் மாற்றமடையும் ? (02 புள்ளிகள்)
(இ) வரியின் மூலமாக அரசாங்கம் எந்தளவினை வருவாயாகத் திரட்டும் ? (02 புள்ளிகள்)
(ஈ) வரியினால் ஏற்படும் மீளமுடியா இழப்பின் அளவினைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

4. (i) குறைந்து செல்லும் விளைவு விதி மற்றும் குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதி என்பவற்றிற்கிடையிலான வேறுபாடு யாது ? (04 புள்ளிகள்)
(ii) எல்லைச் செலவு, மொத்த சராசரிச் செலவு என்பவற்றிற்கிடையிலான தொடர்பினை விளக்குக. (04 புள்ளிகள்)
(iii) உற்பத்தியாளன் மிகை, பொருளியல் இலாபம், பொருளியல் வாடகை ஆகிய எண்ணக்கருக்களை விளக்குக. (04 புள்ளிகள்)
(iv) நிறைபோட்டிக் கைத்தொழிலிலுள்ள நிறுவனமொன்று சந்தை விலைக்குக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ ஒரு விலையை **அறவிடாதது** ஏன் ? (04 புள்ளிகள்)
(v) பின்வரும் வரைபடம் குறுங்காலத்தில் நிறைபோட்டிச் சந்தையொன்றிலுள்ள நிறுவனமொன்றின் கேள்வி மற்றும் செலவு வளையிகளைக் காட்டுகிறது.




More Past Papers at
tamilguru.lk

(அ) ரூ. 160 சந்தை விலையில் நிறுவனம் உழைக்கும் இலாபத்தைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)
(ஆ) நிறுவனம் எந்த விலையில் தொழில் நிறுத்தம் செய்யத் தீர்மானிக்கும் ? (02 புள்ளிகள்)

5. (i) கூட்டப்பட்ட பெறுமதி என்றால் என்ன ? அது எவ்வாறு கணிப்பிடப்படுகிறது ? (04 புள்ளிகள்)
(ii) மொத்த வருமானத்தின் பிரதான கூறுகளைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)
(iii) பின்வரும் பரிமாற்றல்கள் ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படுமா, இல்லையா என்பதை விளக்குக.
(அ) சுற்றுலா ஹோட்டலொன்று வெளிநாடொன்றில் உற்பத்தி செய்யப்பட்ட, கொள்கலனில் அடைக்கப்பட்ட ரூ. 10 மில்லியன் பெறுமதியான உணவுப் பதார்த்தங்களைக் கொள்வனவு செய்தல்
(ஆ) மென்பான உற்பத்திக் கம்பனியொன்று, தலைநகரில் மென்பானத்தைப் போத்தலில் அடைக்கும் தொழிற்சாலையொன்றைப் புதிதாக நிர்மாணித்தல்
(இ) முதலீட்டாளரொருவர் பிரதான வணிக வங்கியொன்றில் ரூ. 30 மில்லியன் பெறுமதியான பங்குகளைக் கொள்வனவு செய்தல்
(ஈ) புத்தக வெளியீட்டாளரொருவர் புதிய புத்தகமொன்றின் அதிகளவான பிரதிகளை அச்சிட்டு அவற்றுள் இவ்வாண்டில் விற்கப்படாது எஞ்சியுள்ள பிரதிகளைக் கம்பனியின் கையிருப்பில் சேர்த்தல் (04 புள்ளிகள்)

More Past Papers at
tamilguru.lk

(iv) பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளியல் தரவுகள் சில பின்வருமாறு தரப்படுகின்றன.
(சகல இலக்கங்களும் மில்லியன் ரூபாவில்)

| | | |
|---|---|---|
| தன்னிச்சையான நுகர்வு | = | 500 |
| திட்டமிடப்பட்ட முதலீடு (I) | = | 1 250 |
| அரசாங்கக் கொள்வனவுகள் (G) | = | 1 000 |
| தேறிய ஏற்றுமதிகள் (NX) | = | – 250 |
| எல்லை நுகர்வு நாட்டம் (MPC) | = | 0.8 |

இப்பொருளாதாரத்தின் சமநிலை தேசிய வருமான மட்டத்தை நிர்ணயிக்குக. (04 புள்ளிகள்)

(v) பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளியல் தரவுகள் சில பின்வருமாறு தரப்படுகின்றன.
(சகல இலக்கங்களும் மில்லியன் ரூபாவில்)

| | | |
|---|---|---|
| தேசிய வருமானம் | = | 1 000 |
| நுகர்வு | = | 500 |
| அரசாங்க செலவீடு | = | 250 |
| தேறிய ஏற்றுமதிகள் | = | 100 |
| பாதீட்டுக் குறைநிலை | = | 40 |

(அ) செலவிடத்தக்க தேசிய வருமானத்தைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) இப்பொருளாதாரத்தில் முதலீட்டின் பெறுமதி யாது ? (02 புள்ளிகள்)

## உப பிரிவு 'ஆ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

**6.** (i) நாணயக் கணியக் கோட்பாட்டிற்கும் பரிமாற்றச் சமன்பாட்டிற்கும் இடையிலான வேறுபாடு யாது ? (04 புள்ளிகள்)

(ii) இலங்கையில் வாழ்க்கைச் செலவின் ஓர் அளவீடு என்ற வகையில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுடன் ஒப்பிடுகையில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அனுகூலங்கள் யாவை ? (04 புள்ளிகள்)

(iii) மக்கள் தம்மிடம் பணத்தை வைத்திருப்பதேன் ? மக்கள் தம்மிடம் பணத்தை வைத்திருக்கும் அளவில் வருமான மட்டம் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் ? (04 புள்ளிகள்)

(iv) கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றில் பணநிரம்பல் (M) ரூ. 3 600 பில்லியனாகவும் மொத்த வங்கி வைப்புகள் (D) ரூ. 3 200 பில்லியனாகவும் நியதி ஒதுக்கு வீதம் 10% ஆகவும் இருப்பதோடு வங்கிகள் ஒதுக்குகளைப் பேணவில்லை எனவும் கொள்க.

(அ) இப்பொருளாதாரத்தில் பணப் பெருக்கியின் பெறுமானம் யாது ? (02 புள்ளிகள்)

(ஆ) இப்பொருளாதாரத்தின் பணநிரம்பலை ரூ. 100 மில்லியனால் குறைக்க வேண்டுமாயின் மத்திய வங்கி என்ன செய்ய வேண்டும் ? (02 புள்ளிகள்)

(v) இலங்கையில் வங்கிகளுக்கிடையிலான அழைப்புக் கடன் நிதிச்சந்தை வட்டி வீதங்களைக் கட்டுப்படுத்த இலங்கை மத்திய வங்கியானது துணைநில் வசதி வட்டி வீதச் செல்வழியை எவ்வாறு செயற்படுத்துகிறது ? (04 புள்ளிகள்)

**7.** (i) வெளிவாரிகள் காணப்படுகின்றமையானது பொருளாதாரமொன்றில் வளங்களின் வினைத்திறனற்ற ஒதுக்கீட்டிற்கு எவ்வாறு இட்டுச் செல்லுமென விளக்குக. உமது விடையினைப் பொருத்தமான வரைபடங்களின் உதவியுடன் விவரிக்குக. (04 புள்ளிகள்)

(ii) பொதுப் பொருள்கள் என்றால் என்ன ? சந்தைகள் அவ்வாறான பொருள்களை இலகுவாக வழங்க **முடியாதிருப்பது** ஏன் ? (04 புள்ளிகள்)

(iii) வரிவிதிப்பின் நோக்கங்கள் யாவை ? (04 புள்ளிகள்)

(iv) சிறந்த வரிமுறையொன்றின் விரும்பத்தக்க பண்புகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) இலங்கை அரசாங்கத்தின் மீளெழும் செலவினங்களின் பிரதான உள்ளடக்கங்களைத் தருக. (04 புள்ளிகள்)

**8.** (i) ஒப்பீட்டு நன்மையையும் முழு நன்மையையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(ii) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் விவசாயப் பொருள் ஏற்றுமதி வருவாய்களின் மந்தகதியிலான வளர்ச்சிக்கான காரணங்களைத் தருக. (04 புள்ளிகள்)

(iii) இலங்கை தற்போது மேற்கொண்டுள்ள பிராந்திய மற்றும் இருபக்க தாராள வர்த்தக உடன்படிக்கைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை இரட்டைப்பதிவு முறையைப் பயன்படுத்தி இலங்கையின் சென்மதி நிலுவை அட்டவணையில் எவ்வாறு பதிவு செய்வீர் ?

(அ) சீன முதலீட்டாளரொருவர் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் 10 மில்லியன் டொலர் பெறுமதியான பங்குகளைக் கொள்வனவு செய்தல்

(ஆ) மத்திய கிழக்கில் பணிபுரியும் இலங்கைப் பணிப்பெண்ணொருவர் இலங்கையிலுள்ள தனது பெற்றோருக்கு 500 டொலர்களை அனுப்புதல்

[பக். 4 ஐப் பார்க்க

(இ) இலங்கையிலுள்ள வங்கியொன்று வெளிநாட்டு நிதிச் சந்தைகளில் முறிகளை விற்பனை செய்வதன் மூலம் 40 மில்லியன் டொலர்களைப் பெற்றுக்கொள்ளல்

(ஈ) இலங்கையிலுள்ள வெளியீட்டுக் கம்பனியொன்று உலகில் பிரபலமாக விற்பனையாகும் புத்தகமொன்றை மொழிபெயர்ப்புச் செய்து இலங்கையில் விற்பனை செய்யும் நோக்கில் அமெரிக்க வெளியீட்டாளர் ஒருவரிடமிருந்து 5 000 டொலருக்கு அப்புத்தகத்தின் வெளியீட்டுரிமையைப் பெற்றுக்கொள்ளல் (04 புள்ளிகள்)

(v) மிதக்கும் நாணய மாற்றுவீத முறைமையின் கீழ் இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி அமெரிக்க டொலர்களில் நிர்ணயிக்கப்படும் விதத்தைக் காட்ட பொருத்தமான வரைபடமொன்றை வரைக. வெளிநாட்டு நாணயச் சந்தையில் கேள்வி வளையி கீழ் நோக்கியும் நிரம்பல் வளையி மேல் நோக்கியும் ஏன் சரிந்து செல்லும் என விளக்குக. (04 புள்ளிகள்)

**9.** (i) தலைக்குரிய தேசிய வருமானத்தோடு ஒப்பிடுகையில் அபிவிருத்தியின் ஒரு சிறந்த அளவீடாக மனித அபிவிருத்திச் சுட்டெண் கருதப்படுவது ஏன் ? (05 புள்ளிகள்)

(ii) நீண்டகால பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் **ஐந்தைக்** குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iii) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் வறுமை மட்டத்தைக் குறைப்பதில் பங்களிப்புச் செய்துள்ள முக்கிய காரணிகள் யாவை ? (05 புள்ளிகள்)

(iv) "பொதுப்படுகடன் மூலம் நிதியீட்டம் செய்யப்படும் வர்த்தகமல்லாத் துறைகளை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சி உபாயமானது, பொருளாதாரத்தை நீண்டகால பேண்தகு வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லுமென எதிர்பார்க்க முடியாது." கடந்த ஐந்து வருடகால இலங்கையின் அனுபவங்களின் அடிப்படையில் இக் கூற்றின் நம்பகத் தன்மையினை மதிப்பிடுக. (05 புள்ளிகள்)

**10.** (i) "அண்மைய ஆண்டுகளில் அரசாங்கம் பல்வேறு ஊக்குவிப்புகளை வழங்கிய போதிலும் இலங்கையின் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் நடத்தையானது எதிர்பார்ப்புகளைச் சிதறடித்துள்ளது."
இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்குத் தடையாகவுள்ள பிரதான காரணிகள் யாவை ? (05 புள்ளிகள்)

(ii) இலங்கையின் அரசாங்க நிதிநிலைமையின் பிரதான கட்டமைப்புசார் பலவீனங்களைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iii) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் வர்த்தக நிலுவையின் குறைநிலையானது விரிவடைந்து செல்வதற்கான காரணங்கள் யாவை ? (05 புள்ளிகள்)

(iv) இலங்கையின் நீண்டகால பொருளாதார வளர்ச்சியில் ஒரு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தத்தக்க, உலகப் பொருளாதாரத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

* * *

More Past Papers at tamilguru.lk